187—

புதிய சொகுசுப் பேருந்து

***14353—திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து சென்னைக்குப் புதிய சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாமக்கல்—சென்னை வழித்தடத்தில் புதிய சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வினாக்கள்தான் அவையிலே உறுப்பினர்களைச் சற்று அதிகமாகப் பேச வைக்கின்றன என்று நான் கருதுகின்றேன். நான் கேட்ட வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள், 'விடப்படும்' என்று சொல்லியிருந்தால், ஒரே வார்த்தையில் நான் 'நன்றி' என்று சொல்லிவிட்டு, அமர்ந்திருப்பேன். நாமக்கல் பகுதிக்கு சென்னையிலிருந்து குளிர்சாதன வசதியோடு அரசு பஸ்கள் செல்வது இல்லை. ஆனால், தனியார் பேருந்துகள் இப்பொழுது அந்த வழித்தடத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற சிரமம் என்னவென்றால், அந்தத் தனியார் பேருந்துகளில் மிக அதிகமான பணத்தைப் பெற்றுக்கொண்டு--ஒரு சீட்டுக்கு 225 ரூபாய் அளவிலே பெற்று--இப்போது நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், குளிர்சாதன வசதி இல்லாமல் அந்தத் தடத்திலே சென்று கொண்டிருக்கிற அரசு பஸ்களில் 111 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. நீங்கள் குளிர்சாதன வசதியுடன் அந்தத் தடத்திலே பேருந்துகளை இயக்கினால் அதிகபட்சமாக 150 ரூபாய் அல்லது 190 ரூபாய் வரை பெறுவீர்கள். இதனால், அந்தப் பகுதிகளுக்குச் செல்லுகின்ற மக்கள் சற்றுக் குறைவான கட்டணத்திலே சென்று சேருவதற்கும் வசதியாக

2003 ஏப்ரல் 7]

இருக்கும். நான் மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன். அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கலாவதி அவர்கள் மூலமாகவோ அல்லது வேறு உறுப்பினர் மூலமாகவோ கேட்டிருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'சரி' என்று சொல்லி இருக்கலாம்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. கு. ஜெயக்குமார்: நான் இந்தப் பக்கத்தில் இருந்து கேட்பதால்தான், இல்லையென்று சொல்லுகின்ற எண்ணம் என்று கூட எனக்குத் தோன்றுகிறது. தயவுசெய்து அந்த பஸ்ஸை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்தப் பக்கத்தில் இருந்தாலும், 'இல்லை' என்பதுதான் பதில். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் அல்லது தவறான தகவலைத் தருகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். எங்களுடைய ஆளுங்கட்சித் தரப்பிலே கேட்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட நாங்கள் பெரும்பாலான நேரங்களிலே, 'negative answer'-ஐத்தான், 'இல்லை' என்ற பதிலைத்தான் பல முறை சொல்லியிருக்கிறோம். இருந்தாலும்கூட, இதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையிலே, இன்ன சட்டமன்ற உறுப்பினர் என்ற விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டு, எல்லாத் தொகுதிகளையும் தன்னுடைய சொந்தத் தொகுதியாகப் பாவிக்கிறார்கள். அப்படிச் செயலாற்றி வருகிறவர்கள்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதியாக நினைத்து, இன்றைக்குப் பல்வேறு பணிகளைத், திட்டமிட்டுச் செயலாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் கேட்டதற்கு நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இல்லையென்றுதான் சொல்லி இருக்கிறேனே தவிர, சாதாரணப் பேருந்துகள், 4 பேருந்துகள் 8 நடைகள் ஏற்கெனவே இயக்கப்படுகின்றன. அந்த 8 நடைகள் இயக்கப்பட்ட போதிலும்கூட, அந்த 8 நடைகளிலுமே பயணிகளுடைய விகிதாச்சாரம் இப்போது குறைவாக இருக்கிறது. சொல்லப் போனால், நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வருகின்ற அந்த 4 பேருந்துகளிலும் 71 விழுக்காடுதான் பயணிகள் சராசரியாகப் பயணம் செய்கிறார்கள். 100 விழுக்காடு பயணிகள் பஸ்ஸில் பயணம் செய்தால் கூடுதல் பேருந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளிலேயே போதுமான அளவிற்குப் பயணிகள் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, புதியதாக ஒரு பேருந்து விடுவதற்கு வாய்ப்பில்லை என்றுதான் நான் சொன்னேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொகுசுப் பேருந்தாக இயக்கினால் இன்னும் ஒருவேளை கூடுதலாகப் பயணிகள் வருவார்கள் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அவர்கள் சொன்னதுபோல அவர்களுடைய நன்றியைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 188, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

188—

தொழிற்பேட்டை

***7255—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?